தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26-11-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்ககலையில் மதிப்பூட்டும் இயந்திரங்கள் துவக்க விழா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், விரிவாக்க கல்வி இயக்ககத்தில் இயங்கி வரும், சந்தை விரிவாக்கத் துறை, தமிழக அரசின் வேளாண்மைத் துறையுடன் இணைந்து, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் தீவிர தானிய மேம்பாடு மூலம் ஊட்டச்சத்து பாதுகாப்பு முனைப்புத்திட்டத்தில் பயன் பெறுவதற்காக சூலூர் - கண்ணம்பாளையத்திலுள்ள அம்மா பண்ணை மகளிர் குழுவை தேர்வு செய்து, சிறுதானியங்களில் இருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கத் தேவையான இயந்திரங்கள் வழங்கும் விழா 24.11.2015 அன்று நடந்தது.

சிறுதானியங்களைத் தனியாக விற்பதை விட, அவற்றிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருட்களைத் தயாரித்து விற்கும் போது விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். இதை ஊக்குவிக்கும் வகையில் ரூ.4 லட்சம் மதிப்பிலான சிறுதானியங்களில் கல் குருணை நீக்கும் இயந்திரம், உமி நீக்கும் இயந்திரம், மாவு அரைக்கும் இயந்திரம், மாவு சலிக்கும் இயந்திரம், பாலிதீன் பை ஒட்டும் இயந்திரம் மற்றும் சணற்பை தைக்கும் இயந்திரங்கள் ஆகியன அம்மா பண்ணை மகளிர் குழுவிற்கு இவ்விழாவில் வழங்கப்பட்டன.

விழாவிற்கு வருகை புரிந்தவர்களை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக சந்தை விரிவாக்கத் துறை பேராசிரியர் முனைவர் செல்வி வரவேற்றார். சந்தை விரிவாக்கத் துறை பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர். பாலசுப்பிரமணியன், சந்தை விரிவாக்கத்துறை மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் திரு.மு.சந்திரசேகரன் ஆகியோர் விழாவை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்கள்.

வேளாண் உதவி இயக்குநர் திருமதி. ஆ.மு.ஜெயஸ்ரீ மற்றும் கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.தங்கமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இதற்கான ஏற்பாடுகளை பல்கலைக்கழக தொழில்நுட்ப உதவியாளர் வே.நெல்சன் மற்றும் வேளாண் தொழில்நுட்ப மேலாளர் திரு.இராஜேந்திரன் ஆகியோர் செய்திருந்தனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்


தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை
கோவை மாவட்டம்